# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 207/மா/2023**
**நாள் : 24.08.2023**

திரு. N. தமிழரசு,
சென்னை–600 097. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752. என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு என்பவரின் 08.12.2022 நாளிட்ட மனு 12.12.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 207/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752 என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு என்பவரின் முறையீட்டு மனுவில் :

I had sent a complaint to the said respondents, regarding "Pudhu Kulam" falls under Division 195 (formerly Division 194), Unit-45, Zone-XV Greater Chennai Corporation, comprised in Survey No.209/1, Old Survey No.209/B located at P.T.C. Quarters, Okkiyam Thoraipakkam, Chennai – 600 097.

I have received reply that "The tenders for restoration and improvement work were published on 04.09.2018 and its validity is 90 days. An amount of Rs.23,25,446/- has been allotted for restoration and improvement works in the "Pudhu Kulam Pond in the year 2018. The work is under progress. Bill is yet to be paid to the contractor M/s. Spancrete Civil Engineers."

But the said "Pudhu Kulam" pond has not been restored or any improvement work been performed, it is clearly demonstrated that the allocated funds were and used for that purpose.

Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you to investigate and kindly take appropriate action against them for their failure to perform their duties and any misappropriation they made.

Note: I have attached photocopy of said Pudhu Kulam Pond which shows showing no restoration or improvement has taken place.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -15ன் மண்டல அலுவலரிடம் 25.01.2023 மற்றும் 27.07.2023 நாளிட்ட கடிதங்களில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்- 15ன் மண்டல அலுவலர் 3.8.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

"மண்டலம்-15, பகுதி-45 கோட்டம்-195ல் உள்ள பல்லவன் குடியிருப்பு பகுதியில் புதுகுளம் என்கிற குளத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 2018ல் புனரமைக்கவும் மற்றும் புதுப்பிக்கவும் தலைமையகத்தில் உள்ள மழைநீர் வடிகால்வாய் துறை மூலம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணி ஆணையினை Spancrete Civil Engineers என்கின்ற ஒப்பந்ததாருக்கு வழங்கப்பட்டது. பணி துவக்கப்பட்டு குளத்தில் உள்ள ஆகாயத்தாமரை அகற்றப்பட்டது. குளத்தில் உள்ள நீரையும் நீரிறைக்கும் இயந்திரம் மூலம் நீரிறைக்கப்பட்டது. நீரூற்றின் காரணமாக நீர்வரத்து அதிகமாக உள்ளதாலும் நீர் வெளியேறும் (Outlet) கால்வாய் இல்லாததாலும் பணியினை முழுமையாக முடிக்க இயலவில்லை. குளத்தை ஆழப்படுத்தி நான்கு பக்கமும் கரையமைக்க முயன்றபோது குளத்தின் நீர்வரத்து அதிகமாக இருந்தால் பணி மேற்கொள்ள இயலவில்லை. இயந்திரங்கள் கொண்டு முயற்சி செய்தபோது, பல வழிகளில் முயன்றபோதும் களத்தில் பல இன்னல்கள் உருவானது. ஆகவே வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. துணை ஆணையரும் மண்டல அலுவலர்களும் சேர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. துணை ஆணையரின் அறிவுரையின்படி, ஊற்று எடுக்கும் நீரை வெளியேற்ற 110 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டு OMR சாலையில் உள்ள கால்வாயில் இணைக்கப்பட்டது. இந்த பணிக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியினை வீணாக்காமல் பயன்தரும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் பயன்படுத்தப்பட்டது என பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 07.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 27.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 7.8.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15, கோட்டம்–195ல் சர்வே எண்.209/1, பழைய சர்வே எண்.209/B, ஒக்கியம் துரைப்பாக்கம் PTC Quarters-ல் அமைந்துள்ள புதுகுளம் என்ற குளத்தை சீரமைக்க ரூ 23,25,446/– மதிப்பீட்டில், 04.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணி 90 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். ஆனால், மேற்கண்ட பணி மாநகராட்சியால் முடிக்கப்படவில்லை. இது தொடர்பாக பணி முடிக்கப்பட்டதா, அதற்கான தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதா என தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மாநகராட்சியிடமிருந்து தகவல் கோரியபோது, மாநகராட்சியின் 3.3.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட பணிகள் 27.6.2019 அன்று முடிக்கப்பட்டுவிட்டது என்றும் அதற்கான தொகை வழங்கப்பட்டு விட்டதா என்பதற்கு அதற்கான தொகை ஒப்பந்ததாரருக்கு 27.06.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் Accounts Cell / Storm Water /Drain Department, மூலம் வழங்கப்பட்டுவிட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நேரில் பார்த்தபோது புதுகுளம் சீரமைக்கும் பணி இன்னும் முடிவடையவில்லை என தெரியவந்துள்ளது. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மாநகராட்சியால் எனக்கு அனுப்பப்பட்ட மேற்கண்ட 3.3.2023 நாளிட்ட கடிதத்தின் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

எனவே, புதுகுளம் சீரமைக்கும் பணியை மாநகராட்சியால் முடிக்காமல், முடிந்து விட்டது என தெரிவித்துள்ளது குறித்தும், ஒப்பந்தத்திற்கான மதிப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுவிட்டதா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவிப் பொறியாளர் 07.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வரும் வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ல் உள்ள புதுகுளம் என்கின்ற குளத்தை சீரமைக்க மாநகராட்சியால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணி ஆணை Spancrete Civil Engineers என்கின்ற ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட நிலையில் குளத்தில் நீரூற்றின் காரணமாக நீர்வரத்து அதிகமாக இருந்த நிலையில், நீரை வெளியேற்ற outlet இல்லாத நிலையில் வட்டார துணை ஆணையரின் அறிவுரைப்படி ஊற்றெடுக்கும் நீரை வெளியேற்ற 110 மீட்டர் மழை நீர் வடிகால்வாய் OMR சாலையில் உள்ள மழை நீர் வடிகால்வாயுடன் இணைக்கப்பட்டது என்ற விபரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்–15 அவர்களின் 3.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15, கோட்டம் 195ல் சர்வே எண்.209/1, பழைய சர்வே எண்.209/B, ஒக்கியம் துரைப்பாக்கம் PTC காலனியில் அமைந்துள்ள புதுக்குளத்தை சீரமைக்க ரூ.23,25,446/- மதிப்பீட்டில் 4.9.2018 அன்று ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது எனவும், ஆனால் பணி முடிக்காமல் பணி முடிந்துவிட்டதாகவும், அதற்கான தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும், முரணான தகவல்கள் அளித்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15ல் சர்வே எண்.209/1, பழைய சர்வே எண்.209/B, ஒக்கியம் துரைப்பாக்கம், PTC காலனியில் அமைந்துள்ள புதுக்குளத்தை சீரமைக்க ரூ.23,25,446/- மதிப்பீட்டில் ஒப்பந்தம் கோரப்பட்டது என்றும், ஆனால் சீரமைக்கும் போது ஊற்று நீர் அதிகமாக வந்ததால், கரைகளை அமைப்பதற்கு பதில், துணை ஆணையரின் கள ஆய்வுக்கு பிறகு அளித்த அறிவுரையின்படி, ஊற்று எடுக்கும் நீரை வெளியேற்ற 110 மீட்டர் நிலத்திற்கு மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டு OMR சாலையில் உள்ள கால்வாயில் இணைக்கப்பட்டது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். இதற்கான ஆதார ஆவண புகைப்படங்களை பெருநகர சென்னை மாநகராட்சி அளிக்கவில்லை. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் --15ன் மேல்முறையீட்டு அலுவலர், மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் அளித்த தகவலில், மேற்கண்ட பணி 27.6.2019 அன்று முடிவடைந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் Joint Account Cell / Storm Water Drain கரையின் மூலம் 27.6.2019 அன்று வழங்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் இன்னும் பணி முடிக்கப்படவில்லையெனவும், ஆனால் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டுவிட்டதாக கூறுவது பற்றி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் அலுவலரால் சரியான பதில் அளிக்க இயலவில்லை.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டும் மற்றும்

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

   (i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) x x x x

(b) x x x x

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner. namely:-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for willful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 15ல் சர்வே எண்.209/1, சர்வே எண்.209/B, ஒக்கியம் துரைப்பாக்கம் PTC காலனியில் அமைந்துள்ள புதுகுளத்தை சீரமைக்க ரூ.23,25,446/-ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை ஒப்பந்தப்புள்ளியில் வரையறுக்கப்பட்டவாறு கரையை சீரமைக்காமல், வேறுபணி மேற்கொண்டு, ஒப்பந்த தொகை செலவிடப்பட்டுள்ளதாக இம்முறைமன்றம் கருதுவதால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுதாரருக்கு தவறான தகவல் அளித்தது மட்டுமல்லாமல், புதுகுளம் சீரமைப்பு பற்றி இம்முறைமன்றத்திற்கு உண்மையான தகவலை அளிக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15 சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மண்டலம் 15, கோட்டம் 195-ல் சர்வே எண் 209/1, பழைய சர்வே எண்.209/B, PTC Quarters அமைந்துள்ள புதுகுளம் உண்மையில் சீரமைக்கப்பட்டதா என்பதை ஒரு குழு அமைத்து அக்குழுவின் அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Public Information Officer in his reply dated 04/02/2022 to the petitioner has stated that the bill is yet to be paid to the contractor but in the report of the Zonal Officer dated 03/08/2023 it has been stated that the amount allocated has been spent without any

wasteful expenditure. This ambiguity has to be set right by the Greater Chennai Corporation and the Commissioner Greater Chennai Corporation is directed to get this confirmed. Secondly, the Zonal Officer has reported that due to certain unforeseen developments the work could not be executed as planned in the estimate and work order and certain other associated works were carried out with rainwater drainage pipeline for a length of 10 meters. This Forum directs, the Chief Engineer of the Greater Chennai Corporation to inspect the Kulam where the works were executed at a cost of Rs.23.25 lakhs and verify whether the purpose of the plan/work estimate was achieved in the circumstances as reported by the zonal officer. The Director of Local Fund Audit is directed to verify the bills and vouchers pertaining to this work to ensure that there has been no squandering of the Corporation's revenue in the execution. Both the Chief Engineer Greater Chennai Corporation and Director of Local Fund Audit should send an action taken report within 45 days from the date of receipt of this order.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. N. தமிழரசு,
வழக்கறிஞர்,
எண்.3/752, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம் (OMR) சென்னை – 600 097.
2. மண்டல அலுவலர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
120, ராஜீவ் காந்தி சாலை, சோளிங்கநல்லூர்,
சென்னை – 600 119.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. துணை ஆணையர் (பணி),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.
} for taking necessary action.
5. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032

பிரிவு அலுவலர்